## தலைப்பு 07 – நீதிச் சேவை ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) நீதிச் சேவை ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

2018 நவம்பர் 21 இன் 267/2018 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டிய போதிலும், இந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகல்கள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுகைகளாக அறிக்கையிடப்பட வேண்டிய ரூபா 2,851,622 தொகையொன்று வரியில்லா வருமானமாக அறிக்கையிடப் பட்டிருந்ததுடன் நிறுவகமொன்றின் சேவையில் தொடர்ந்தும் காணப்படும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்த ரொருவரினால் தயாரிக்கப்படவேண்டிய அந்தப் பெறுமதி ACA 01 வடிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. | நீதிந் சேவை ஆணைக் குழுவுக்காக காணப்பட்டிராத, ACA 01 வடிவம் வருமான முதலீட்டொன்றுடன் தொடர்புடையாத மேற்கொள்ளப்படக் கூடாது. | ACA-01 இல் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,851,622 பெறுமதியுடைய ஏனைய வருமானப் பெறுகைகளினை இதன் பின்னர் உள்ளடக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலவுத்தாள் ஒன்றாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 4,199,025 தொகையான குறுக்குப் பதிவு சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் துல்லியமாக தயாரிக்கப்பட்டிருக்காத கட்டுநிதி பண சரிப்படுத்தல் | கட்டுநிதி பண சரிப்படுத்தல் கணக்கினை தயாரிக்குகையில் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 267/2018 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கினை தயாரிக்கையில் குறுக்குப் பதிவுகளின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. ஆகையினால் அந்த மீதிக்கு அதனை உள்ளடக்குவதற்குப் |

| | | |
|---|---|---|
| கணக்குகள் தொடர்பான கட்டுநிதிப் பண சரிப்படுத்தல் கணக்கில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | | பதிலாக நிதிச் செயலாற்றல் கூற்றிலிருந்து பெறப்பட்ட கட்டுநிதிக் கணக்கு மீதியுடன் அது சரிப்படுத்தப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் கணக்கில் மொத்தப் பெறுகைகள் ரூபா 4,791,924 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுகைகளின் கீழ் அது உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | ரூபா 4,791,924 பெறுமதியுடைய அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டில் பெறப்பட்ட அந்த மொத்தம், நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுகைகளின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். | கட்டுநிதிக் கணக்கின் மொத்த மீதியுடன் சரிப்படுத்தப்பட்ட வகையொன்றில் முற்பணக் கணக்கிலுள்ள காசு பெறுகைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. முற்பணக் கணக்கில் குறுக்குப் பதிவுகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகளாகவிருந்த அவை மற்றும் கட்டுநிதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்காத அந்த பெறுகைகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஏற்பாடுகளினைப் பயன்படுத்தாமை** | | |
| செயற்பாட்டு குத்தகை முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான தவணைப் பணங்களின் செலுத்துகைக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினூடாக ரூபா 2.35 மில்லியன் தொகையொன்று ஏற்பாடு | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்திறன் மற்றும் வினைத்திறனின் மீது முறையான கவனத்தைச் செலுத்துவதன் | நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளினை பரீட்சைகள் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்தமையினால் வேன் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு நீக்கப்பட்டமை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் ரூபா 2.11 மில்லியன் தொகையொன்று நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் 04 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மீதமாகவுள்ள ரூபா 223,000 தொகையான ஏற்பாடு கூட பயன்படுத்தப்பட்டிருந்தது. | மூலம் செலவின மதிப்பீடு துல்லியமாகத் தயாரிக்கப்பட வேண்டும். | மற்றும் நீதி அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு மோட்டார் கார்களினை நீதிச் சேவை ஆணைக்குழுவின் வாகன குழாத்திற்கு பெற்றுக்கொண்டமை என்பன செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களினைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடொன்றை தோற்றுவித்திருக்கவில்லை. ஆகையினால், அந்த ஏற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், ரூபா 233,000 தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிராது சேமிக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) ஏற்பாடுகளின் குறைப்பயன்பாடு**

| | | |
|---|---|---|
| 06 மீண்டெழும் செலவின விடயங்களுடன் தொடர்புடைய மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 5.7 மில்லியன் தொகையொன்றாகக் காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான அந்த செலவின விடயங்களுடன் தொடர்புடைய மொத்தச் செலவினம் ரூபா 3.44 மில்லியன் தொகையொன்றாகக் காணப்பட்டிருந்தது. ஆகையினால், 28 சதவீதத்திலிருந்து 86 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 2.25 மில்லியன் தொகையான தேறிய சேமிப்புக்கள் காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்திறன் மற்றும் வினைத்திறனின் மீது முறையான கவனத்தைச் செலுத்துவதன் மூலம் செலவின மதிப்பீடு துல்லியமாகத் தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடுகளுக்கு தொடர்ந்தும் நிலவும் நிலைமைகளின் கீழ் நியாயமானதாக எதிர்பார்க்கப்பட்ட அனைத்து செலவினங்களையும் உள்ளடக்குவதன் மூலம் முறையான கவனத்தைச் செலுத்தி செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் வெளிவாரியான காரணங்கள் தொடர்பான மதிப்பீடுகளுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், உள்ளூர் போக்குவரத்து செலவினங்களின் மட்டுப்படுத்தல்கள், சீருடைகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களின் குறைவு, அத்தியாவசிய பராமரிப்பு செயற்பாடுகளினை மாத்திரம் மேற்கொள்ளுதல், திட்டமிட்டவாறு பரீட்சிப்புக்களினை நடாத்துவதற்கு இயலாதிருந்தமை, கடன்களினைப் பெற்ற உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | கடன்களின் தீர்ப்பனவு என்பன இது தொடர்பான காரணங்களாக குறிப்பிட முடியுமாகக் காணப்பட்டது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்கான ஆணைக்குழுவின் முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் நோக்க விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட நிறுவன அமைப்பு வரைபடம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் வருடாந்த பாதீடு மற்றும் கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் அடிப்படையில், முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்கியிராது மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். | 06/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2016 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்துடன் அனுப்பப்பட்ட வடிவத்தின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிலிருந்து 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளரொருவரின் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை . | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள் வதற்காக உள்ளகக் கணக்காய்வாள ரொருவர் நியமிக்கப்படல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2017 யூலை 18 ஆந் திகதிய மற்றும் DMS/102/Vol 1 ஆம் கடிதத்தின் மூலம் நீதிச் சேவை ஆணைக்குழுக்கான உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபிப்பதற்கு பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம் அமைந்துள்ள கட்டிடத்திலிருந்து திரும்பப் பெற்றதன் மூலம் 2017 நவம்பர் 15 இலிருந்து கொள்கலன் பெட்டிகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இடப்பரப்புடன் தற்காலிக அலுவலகமொன்றில் நீதிச் சேவை ஆணைக்குழு அலுவலகத்திக் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன், அந்தக் கட்டிடம் தொடர்ந்தும் பாழடைந்த நிலையொன்றில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. மேலே அங்கீகரிக்கப்பட்டவாறு, பதவியணியினரின் ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் புதிதாக அதிகரிக்கப்பட்ட பதவியணியினர்க்காக எவ்வித இடவசதிகளையும் கொண்டிருக்காமையால் அந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) மற்றும் (2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்றை நியமிப்பதன் மூலம் வேண்டப்படும் காலப்பகுதிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அலகொன்றினை ஸ்தாபிப்பதற்கான போதியளவான இடப்பரப்பினைக் கொண்டிருக்காமையின் காரணமாக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் நீதி எழுதுவினைஞர் போன்ற பதவிகள் 100 சதவீதம் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. ஆகையினால், உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்வதில் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களினை நடாத்துவதில் தொடர்ந்தும் இடையூறொன்று காணப்படுகின்றது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சினை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆணைக்குழுவின் பல்வேறு பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 69 ஆகக் காணப்பட்டிருந்தது. | துரிதமாக அத்தியவசியமான பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மிகைப் பதவிகள் தொடர்ந்தும் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பதவியணியினரின் எண்ணிக்கை தொடர்பான மீளாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | அந்த 69 வெற்றிடங்களில், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்க்குச் சொந்தமான மிகை உத்தியோகத்தர்கள் மூலம் 12 வெற்றிடங்களையும் மற்றும் நீதி பதிவாளர் பதவி மற்றும் நீதி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மூலம் 16 பதவிகளினை பூர்த்தியாக்குவதன் மூலம் கடமைகளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம் அந்த |

வெற்றிடங்களின் மத்தியிலும் கூட 2018 ஆம் ஆண்டு தொடர்பில் அதிஉத்தம செயலாற்றலொன்றை அடைந்துகொள்ள முடியுமாகவிருந்தது.